உ

சிவமயம்.

மரகதவிநாயகர் துணை.

தொண்ணூற்றுறார்க் கூட்டத்தின்

தீர்மானங்கள்.

குரோதன ஐப்பசி கச, கடுஉ



பிரதிகள் கரு,000.

"குமரன்" அச்சுக்கூடம்,

காரைக்குடி.

உ
சிவமயம்.
மரகதவிநாயகர் துணை.

குரோதனஸு ஐப்பசிமீ கச, கரு தேதிகளில்

தொண்ணூற்றுறார்

நகரத்தார் கோவிலூரில் கூடிப்

பேசிக்கொண்ட விபரம்.

——(o)——

க. முகூர்த்தம் வைத்தல்:—திருமங்கிலியத்திற்குப் பொன்கொடுத்து கல்யாணத்திற்கு முகூர்த்தம் வைக்க, மஞ்சள் வீசை க-ம், குங்குமம், விபூதி, சந்தனம், புஷ்பமும் எலுமிச்சம்பழம் கரு தேங்காய் கரு. வாழைப்பழம் கOக. வெற்றிலை கவுளி கO. பாக்கு பட்டணம்படி க-ம் கொண்டுவருகிறது. கொண்டுவருகிற சம்பந்தியார்க்கு மாத்திரம் பாக்கு பட்டணம்படி உ-ம் வெற்றிலை கவுளி க-ம் கொடுக்கிறது.

உ. சீதனம்:— கல்யாணத்தில் பெண்ணுக்கு சீதனம், நாலு நாளைச் சீர்முறை உள்ளிடமொத்தம் பூவராகன் கOOக க்குள் கொடுக்கிறது.

ந. ஈடு பொன்:—மாப்பிள்ளை வீட்டார் அவரவர்களின் பழைய வழக்கங்களின்படி ஈடு பொன் தொகையை சீதனத்துடன் சேர்த்து வைக்கிறது.

ச. நகைகள்:—பெண்ணுக்கு கழுத்துரு உள்ளிட எல்லா நகைகளும் சீதனம் சீர்வரிசைகள் கொடுத்துச் செய்யும் கல்யாணங்களில் பெண் வீட்டார் செய்வதானாலும் மாப்பிள்ளை வீட்டார் செய்வதானாலும் இருவகையாரும் சேர்ந்து செய்வதானாலும் மொத்த மதிப்பு ரூ. ருOOக-க்குள் செய்கிறது.

௫. சோபன திரவியம்:—பெண் வீட்டாருக்கு சோபன திரவியம் கொடுத்துக்கொள்வதானால் ரூ. ௩௲ க்குள் கொடுத்துக் கொள்ளுகிறது. ஷை தொகைக்குமேல் மாப்பிள்ளை போராவது பெண் போராவது பணம் எடுத்து வைக்கிறதில்லை. குறிப்பிட்ட ரூ. ௩௲ க்குள் கூடிய வரை சாதகமாக அடுத்த கூட்டத்தில் பேசிக் கொள்ளுகிறது.

௬. ஷை கல்யாணத்தில்:—நகைகள் கழுத்துரு உள்ளிட எல்லா நகைகளும் மாப்பிள்ளை வீட்டார் செய்வதானாலும் பெண் வீட்டார் செய்வதானாலும், இருவகையாரும் சேர்ந்து செய்வதானாலும் மொத்தம் மதிப்பு ரூ. ௩௨௫0 க்குள் செய்கிறது.

௭. சீர்வரிசைகள்:—வெள்ளிப் பாத்திரங்கள் ரூ. ௭0௧-க்குள்ளும், வெண்கலப் பாத்திரம் ௫ உள்ள அடுக்கு ௨௧-க்குள்ளும் மற்றும், விளக்கு குடம் ஆதிய வெண்கலச் சாமான், மங்குச் சாமான், அலுமினியம் சாமான், மரச் சாமான், ஜாடி, நவ பாண்டம், அம்மி, குழவி, பாய், தலையணை, மெத்தை, சேலை ஆதியவைகள் ரூ. ௩௫00 க்குள்ளும் வைக்கிறது.

௮. உணவுப் பொருள்கள்:—வேள்வு அரிசி உள்ளிட அரிசி பட்டணம்படி இரண்டு கொண்ட மரக்கால் ௩0௧- க்குள்ளும், பருப்புமரக்கால் ௩௧- க்குள்ளும் அதற்குத் தோதான மற்ற சாமான்களும் வைக்கிறது.

௯. மாமியார் சாமான்:—மாமியாருக்கென்று பாத்திரம் முதலான சாமான்களாவது பணமாவது கொடுக்கிறதில்லை.

௧0. பின்முறை:—பொங்கல் வேள்வு வருஷம் மூன்று, வேறே இருந்த வேள்வு, பிள்ளை பிறந்த வேள்வு, ஆக வேள்வு ஐந்துக்கும் வேள்வு ஒவ்வொன்றுக்கு அரிசி பட்டணம்படி ௧௫௧-க்குள்ளும் அதை

அனுசரித்து அதற்குரிய சாமான்களும் வைத்து எடுத்தி ரூ. க௦க-க்குள் கொடுக்கிறது.

கக. ருதுவான சடங்கு:—ருதுவான சடங்குக்கு ரூ. க௦க க்குள் கொடுக்கிறது.

க௨. தீர்த்தம் குடித்தல்:—தீர்த்தம் குடிப்பதற்குக் கொண்டுவரும் சாமான்களுக்குப் பிரதியாக ரூ. க௦க க்குள் கொடுக்கிறது.

க௩. பிள்ளைப் பேறு:—பிள்ளை பிறந்த வீட்டில் குழந்தைகளுக்கு நகை, முதற்பிள்ளைக்கு பவுன் ௩க-க்குள்ளும், அடுத்த பிள்ளைகள் ஒவ்வொன்றுக்கும் பவுன் கக-க்குள்ளும் கொடுக்கிறது.

க௪. புதுமை:—காப்புக்கட்டு முதற் புதுமைக்கு மாமவேள்வு அரிசி பட்டணம்படி கருக-க்குள்ளும் அதற்குரிய சாமான்களும் வைத்துஎடுத்தி மற்றும் கொண்டுவரும் சாமான்களுக்குப் பிரதியாக ரூ. ௨௦க-க்குள் கொடுக்கிறது. நகைகளுக்காக முதற் புதுமைக்கு ரூ. க௦க க்குள்ளும், இரண்டாவது புதுமைக்கு ரூ. ருக க்குள்ளும் கொடுக்கிறது.

கரு. கல்யாண மாமவேள்வு:—அரிசி பட்டணம்படி கருக-க்குள்ளும், அதற்குரிய சாமான்களும் வைத்து எடுத்தி ரூ. கருக க்குள் கொடுக்கிறது.

கசு. பொது விதிகள்:—மொய்ப்பணம் எல்லாச் சுப விசேஷங்களிலும் மாமக்காரர் ரூ ௩௭இனு க்குள்ளும், சடங்குக்காரர் ரூ க௨இனு-க்குள்ளும், பங்காளிகள் பந்துக்கள் சிநேகிதர்கள் முதலானவர்கள்—ரூ ௨-க்குள்ளும் எழுதுகிறது. ரூ ௨-க்குள் பணம் எழுதுகிறவர்களுக்கு பாக்குப்பணம், எழுதின பணத்தில் பாதியும், ஓலைப்பெட்டியில் பாக்கு பட்டணம் படி ஒன்றுக்குள்ளும், வெற்றிலையும், மூன்று வகைக்குள் பழமும் வைத்துக்கொடுக்கிறது. ஷை விசேஷங்களில் கூடுபவர்களுக்கு பூக்கெண்டு பூச்சரம் எலு

மிச்சம்பழம், சந்தனம், பன்னீர், தரித்துக்கொள்ளத் தாம்பூலம் இவைகள் வழங்குவதுடன் புதுமையிற் காப்புக்கட்டும்போது சபையிலுள்ளவர்களுக்கு அள்ளிக்கொள்ளும்படி காப்பரிசி சர்க்கரை கற்கண்டு ஆகியமூவகைக்குள் வழங்குகிறது.

கஎ. கல்யாணம், பெண்ணழைப்பு, உபதேசப் புதுமை, தீர்த்தம் குடித்தல், காப்புக்கட்டு முதற் புதுமை, இரண்டாவது புதுமை, கார்த்திகைப்புதுமை, திருவாதிரைப் புதுமை, குடி புகுதல், அறுபதாவது ஆண்டு சாந்திக் கல்யாணம், சதாபிஷேகம் ஆகிய சுப விசேஷங்களிலும் மற்றும் எந்த விசேஷங்களிலும் சட்டி ஆகிய எவ்வித சாமான்களாவது பணமாவது கொடுக்கிறதில்லை.

கஅ. உணவு வகை:—எல்லா விசேஷங்களிலும் மூவகைக்குள் பலகாரம் செய்து உபயோகித்துக் கொள்ளுகிறது. குழம்பு மூன்று, ரசம் ஒன்று கறி பத்துக்குள் வைக்கிறது.

கக. எல்லாச் சுப விசேஷங்களிலும் பாயசம் ஒன்று, வர்க்கான்னம் இரண்டு, பக்ஷணம் இரண்டு, அப்பளம், மூவகைப் பழம், தேன் ஆகிய இவ்வளவுக்குள் உபயோகித்துக் கொள்ளுகிறது.

உ0. ஊர்ப் பாக்கு ஊர்ச் சீனி கொடுக்கிற வழக்கமுள்ள ஊர்களில் கொடுக்க வேண்டுமானல் பாக்கு சின்னப்படி ஒன்றும், வெத்திலையும், சீனி ௰ படி க-ம், தேங்காய் க-ம், வாழைப்பழம் உ-ம் ஒவ்வொரு புள்ளிக்கும் கொடுக்கிறது.

உக. நாள் வரம்பு:—கல்யாணம் புதுமை ஆகிய விசேஷங்களுக்கு நாள் வரம்பைப் பற்றி அடுத்த கூட்டத்தில் தீர்மானம் செய்து கொள்ளுகிறது.

உஉ. வீடுகளில் நடக்கும் எந்த விசேஷங்களிலும் பியாண்டு வாத்தியம், பாட்டுக்கச்சேரி, கதை

கள், சதுர், பிறச்சாதியாரைக்கொண்டு பொட்டிடச் செய்தல், பிறச்சாதியாரைக் கொண்டு பிளேட்டில் தாம்பூலம் வழங்கச் செய்தல், வாகனாதிகளில் ஊர் கோலம் செய்வித்தல், வாணம் மத்தாப்பு அதிர்வேட்டு உபயோகித்தல் இவைகள் செய்கிறதில்லை.

உ௩. முன்பேச்சு:—இதிற்கண்ட முறைகளுக்கு மிகுதியாக இதற்கு முன் யாரும் கல்யாணம் பேசி முடிவுசெய்து கொண்டிருந்தால் சம்பந்திகள் விலாசங்களையும், பெண் மாப்பிள்ளைகள் பெயர்களையும், பேசிக்கொண்டிருக்கிற சீதனம், ஈடு பொன், நகை வகை, மாமியார் சாமான், சோபன திரவியம், சீர் வரிசைகள் ஆகிய இவ்வைகளின் விவரங்களையும் பேசி முடிவு செய்துகொண்ட தேதியையும், தங்கள் தங்கள் ஊர் நகரத்தார் அவர்களிடம் நாளது மீத்துக்குள் எழுத்து மூலம் இருதரத்தாரும் தெரிவித்து பேசிக்கொண்டவைகள் உண்மையென்று உள்ளூர் நகரத்தார்கள் ஒப்புக்கொண்டால் பேசிக் கொண்டபடி அக்ஷயவரு ஆவணிமீத்துக்குள் நடத்திக்கொள்ளுகிறது. மற்றபடியுள்ள ஷைவைகளும் இந்தத் தீர்மானத்தில் உள்ளபடியே செய்கிறது.

உச. தனவைசிய சமூக ஊழிய சபைக்கு ஒவ்வோர் ஊர்களிலும் ௩00 புள்ளிகள் வரை ஒரு அங்கத்தினராகவும் மேலே ஒவ்வொரு ௩00 வரை ஒரு அங்கத்தினராகவும், சேர்ந்து கொள்ளுகிறது. ஒவ்வொரு ஊர்களிலிருந்தும் ஷை கணக்குப்படி அங்கத்தினர்களைத் தேர்ந்து கார்த்திகை மாதத்துக்குள் ஊழியசபையாருக்குத்தெரிவிக்கிறது. எவ்வூரிலாவது கட்சிப் பிரிவினை இருந்தால் ஒவ்வொரு கட்சியிலிருந்தும அங்கத்தினர்கள் சேர்ந்து கொள்ளுகிறது. ஒவ்வொரு வருடமும் ஊர் நகரத்தார்களால் அங்கத்தினர்களைத் தேர்தல் செய்கிறது.

உரு. ஷை சபையார் தங்களுக்குள் கூடித் தங்களில் காரியதரிசிகளை நியமித்துக் கொள்ளுகிறது.

உ௬. தனவைசிய சமூக ஊழியசபை அங்கத்தினர்களின் கூட்டம் ஒவ்வொரு மாதக்கார்த்திகையிலும் குன்றுக்குடியில் அன்னதான மடத்தில் கூடுகிறது. அதற்கு அங்கத்தினர்கள் தங்கள் செலவில் வந்து சேருகிறது. எந்த அங்கத்தினராவது தொடர்ந்து மூன்று கூட்டம் வரை வராதிருந்தால் அவருக்கு பதில் பிரதிநிதி தேர்ந்துவரச் செய்யும்படி அவ்வூர் நகரத்தாருக்குத் தெரிவித்து அவ்வாறு செய்து கொள்ளுகிறது.

உ௭. கூசு ஊர்க் கூட்டம் தனவைசிய சமூக ஊழிய சபைக் கூட்டம் இவைகளின் நிகழ்ச்சிகளையும் அவைகளின் தீர்மானங்களையும் ஷை சபைக் காரியதரிசி அநுமதியின் பேரில் சமூக பத்திரிகைகளின் அநுபந்த முகமாக சமூகத்தாருக்கு மாத்திரம் வழங்கச் செய்யலாம். சமூகப்பத்திரிகைகளில் சமூக பத்திராதிபர்களாவது, சமூக நிருபர்களாவது கூட்டத் தீர்மானங்களுக்கு முரணாக எழுதினாலும் பிற நிருபர்கள் முரணாக எழுதுவதைப் பிரசுரிக்கச் செய்தாலும் நகரத்தார் செய்யும் விதாயத்துக்கு உள்ளாகும் வரை மீறின பத்திரிகைகளை நம்மவர்கள் கையாளப்படாதென்று தனவைசிய சமூக ஊழிய சபையார் நமது சமூகத்தாருக்கு அறிவிக்கச் செய்கிறது.

உ௮. இந்தத் தீர்மான விவரங்களை அச்சிட்டு கூசு ஊர் நகரத்தார்களின் ஒன்பது கோவில்களுக்கும் அனுப்புவதுடன், ஒவ்வொரு ஊர்களுக்கும் அனுப்பி ஒவ்வொரு புள்ளிக்கும் சேர்ப்பிக்கும்படி செய்கிறது.

உ௯. நாளை (ககூ௨) முதல் மேற்கண்ட தீர்மானங்களை நம்மவர் யாவரும் கைக்கொண்டு நடாத்தி வருகிறது.

௩௦. கூட்டத் தீர்மானங்கட்கு மாறாக யாரும் நடந்தால் அவ்வூர் நகரத்தார் கூடி விசாரித்து விதாயம் செய்து கொண்டு விசேஷத்தை நடத்த அநுமதி

க்கவும், விதாயத்துக்கு உள்ளாகா விட்டால் குற்றம் தீர்த்துக் கொள்ளும் வரை தடுக்குத் தடங்கல் செய்து தனவைசிய சமூகஊழிய சபைக்கு எழுதி அனுப்பவும் ஒவ்வொரு ஊர் நகரத்தார்களுக்கும் உரிமை கொடுத்திருக்கிறது. பின்னும் விதாயம் செய்து கொள்ளாதிருந்தால் பெரிய கூட்டத்தில் நகர முறைப்படி செய்கிறது. மேற்கண்ட விதாயங்கட்கு வரும் சிவாதாயப் பணங்களை விவரத்துடன் தனவைசிய சமூக ஊழிய சபைக்கு அனுப்பி வைக்கிறது.

௩க. எவ்வூரிலாவது கட்சிப் பிரிவினை இருந்தால் தனித்தனி ஊர்நகரத்தார்களாகப் பாவித்துக் கொள்ளுகிறது.

௩உ. அழைப்பு முதலியவெல்லாம் தனவைசிய சமூக ஊழிய சபையார் அச்சிட்டுக் கொள்கிறது.

௩௩. பெரிய கூட்டம் கூட்டி வைப்பதற்கு ரூ (ரு000) வரை கை இருப்பு உள்ள வருஷங்களில் புள்ளிவரி வாங்காமல் தொகைவேண்டிய வருஷங்களில் புள்ளிவரி வருஷம் ஒன்றுக்கு ரூ (இ) வீதம் வாங்கிக் கொள்ளும்படி, தனவைசிய சமூக ஊழிய சபையாருக்கு உரிமை கொடுத்திருக்கிறது.

௩ச. தனவைசிய சமூக ஊழிய சபைக் காரியதரிசிகள் கணக்கு வரவு செலவுகள் செய்து வருடம் தோறும் பெரிய கூட்டத்தில் நகரத்தாரிடம் ஒப்புவிக்கிறது.

௩ரு. இந்தத் தீர்மானங்களைத் திருத்தவும் சேர்க்கவும் பெரிய கூட்டத்தாருக்கே உரிமையுண்டு.

௩சா. ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் பௌர்ணிமையில் பெரிய கூட்டம் கோவிலூரில் கூடுகிறது.

இந்தப்படிக்கு,

நகரத்தார்.